மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 117/2020 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | இந்திரஜித் | நாள் | 25.09.2024 |
| தகப்பனார் பெயர் | பெருமாள் கவுண்டர் | | |

**பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

23) அ.வ.எண்.38/2020 என்ற வழக்கு 1ம் பிரதிவாதியால் கடந்த 06.01.2020ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்டது என்றால், சரிதான். மேற்படி வழக்கு 1ம்பிரவாதியால் தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு சுமார் 7 மாதங்களுக்கு பின் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். கடந்த 28.08.2020ம் தேதியில் பிரதிவாதிகளும், அவரது ஆட்களும் சேர்ந்து தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து மரங்களை வெட்ட முயற்சித்ததாக நான் சொல்லும் நிலையில், என்ன முயற்சி செய்தார்கள் என்றால், முதலில் தாவா சொத்திலுள்ள சின்ன கேட்டை உடைக்க முயற்சித்தார்கள். அப்போது அங்கிருந்த அக்கம் பக்கத்தினர் மேற்படி பிரதிவாதிகளை தடுத்து சமாதானம் செய்தனர். அப்போது பிரதிவாதிகள் போகும் பொழுது மேற்படி கேட்டையும், மரத்தையும் எடுக்காமல் விடபோவதில்லை என சவால் விட்டு சென்றனர்.

24) மேற்படி சம்பவம் குறித்து, காவல் நிலையத்தில் ஏதேனும் புகார் கொடுத்தேனா என்றால், இல்லை. 1ம் பிரதிவாதிக்கு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்ட சமயத்தில் சுமார் 85 வயது இருக்கும் என்றால், சரிதான். நடக்க முடியாமல் இருந்தார் என்றால், இல்லை. அவர் மெதுவாக நடப்பார். நான் சொல்வது தவறானது என்றாலும், முறைபடி அவர்களுக்கு பாத்தியப்பட்ட 0.22-1/2 சென்ட் நிலம் தொடர்பாக சுவாதீனம் கேட்டு, மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துவிட்டு, அவ்வாறு தாவா சொத்தில் அத்துமீறி நுழைய வேண்டிய தேவை பிரதிவாதிகளுக்கு இல்லை என்றால், சரியல்ல.

25) நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தின்படியே என் தாயாருக்கு ச.எண்.158/1ல் 3.15 ஏக்கரில் கிழபுறம் பிரிவினையான பொதுவில் பேர் பாதி பாகமான 1.57-1/2 ஏக்கர் நிலம் தான் பாத்தியப்பட்டுள்ளது என்றாலும், மேற்படி நிலத்திற்கு மேல் உள்ள சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றாலும், மேற்படி பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட நிலத்தையும் நான் என் பெயரில் பட்டா செய்து

கொண்டதால் மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் உரிய பரிகாரம் கோரி பிரதிவாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றாலும், அவ்வாறுள்ள நிலையில், ச.எண்.158/1B ல் உள்ள 0.74 செண்ட் நிலத்தை மட்டும் வழக்கு சொத்தாக காட்டி இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளது தவறானது என்றாலும், அதனால்தான் சக்குபந்தியே காட்டாமல் இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், சரியல்ல. மொத்தம் கிரயப்படியும், உறுதிமொழி ஆவணப்படியும் மேற்படி சர்வே எண்ணில் என் தாயாருக்கு 1.79 ஏக்கர் நிலம் பாத்தியப்பட்டுள்ளது. மேற்படி உறுதிமொழி பத்திரம் சார்பு நீதிமன்றத்தில் என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

26) நான் சொல்வது தவறானது என்றாலும், என்னால் கூறப்படும் மேற்படி உறுதிமொழி பத்திரம் வழக்கிற்காக பின்னிட்டு என்னால் ஏற்படுத்தப்பட்டது என்பதால், பிரதிவாதிகளின் உரிமையை அது கட்டுப்படுத்தாது என்றால், சரியல்ல. என் வழக்குரை சங்கதிகளுக்கும் நான் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்திற்கும் முரண்பாடு உள்ளது என்றால், சரியல்ல. சுற்றி நான்குபுறமும் எங்களது நிலம் உள்ளதால், நடுவிலுள்ள பிரதிவாதியின் நிலத்தை அபகரிக்கும் நோக்கில் தவறான சங்கதிகளுடன் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

27) அதனால்தான் அவசர கதியில் தேதி கூட குறிப்பிடாமல், கிராம நிர்வாக அலுவலரிடம் ஒரு கந்தாய ரசீது பெற்று வந்து, இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. விரிவான வழக்கை பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள நிலையில், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கேட்டு நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால், சரியல்ல.

ஒம்/−திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.